
# தியாக மாமலை

கோப்பாய்க் கோமான் கு.வன்னியசிங்கம் பா.உ



## 60ஆண்டு சிராத்த தின வெளியீடு

17.09.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தியாக மாமலை"

## கோப்பாய்க்
## கோமான் கு.வன்னியசிங்கம் பா.உ

60ஆண்டு சிராத்த தின வெளியீடு
17.09.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

ஆவரங்கால் சிவன் கோவில் கிழக்கு வீதியில் 1947ம் ஆண்டு தமிழரசுக்க் கட்சியின் ஆரம்பக்கூட்டம் பல பெரிய தலைவர்கள் மத்தியில் இடம்பெற்றது. ஆரம்பக்கூட்டம் கோப்பாய் கோமான் கு.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தினை எங்கள் பெரியவர் அமரர் தமிழரசு க.சின்னத்துரை அவர்கள் முன்னின்று நடாத்தினார். அவருக்கு உதவியாக அயல் கிராமத்து ஆசிரியர் ஞானி கந்தையா திரு.பொ.சிவகுரு ஆசிரியர் மற்றும் அவர்களோடு சேர்ந்த பெரியவர்களும் கூட்டத்தை நடாத்தினார். எமது இறைவனின் ஆசி தமிழரசுக்கட்சியின் வளர்ச்சிக்கு என்றும் உண்டு. இதனால் எமது ஆலயத்தின் மேல் தமிழரசுக்கட்சிக்காரர்கள் என்றும் தன்நம்பிக்கை வைத்துள்ளனர்.

மேலும் அமரர் கோப்பாய்க் கோமான் கு.வன்னியசிங்கம் அவர்களின் 60ம் ஆண்டு மறைவு தினத்தை முன்னிட்டு வெளியிடும் மலருக்கு என் ஆசியுரை வேண்டி நிற்கின்றேன். இதன் கைங்காரியமாக அமரர் கு.வன்னியசிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தி அடையவும் அவரது குடும்பத்தார்க்கும் ஆவரங்கால் பர்வதவர்த்தனி சமேத நடராஜ இராமலிங்கேஸ்வரர் சுவாமிகளின் கடாட்சம் கிடைத்து வாழ வேண்டுமென்று எமது இறைவனிடம் வேண்டி ஆசியுரை வழங்குகின்றேன்.

**இங்ஙனம்**

**ஆவரங்கால் சிவன்**

**தேவஸ்தானம் "பிரதம குரு"**

**ந.யோகானந்தேஸ்வரக் வே.ந.யோகானந்தேஸ்வரக்குருக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கோப்பாய்க் கோமான் கு.வன்னியசிங்கம் அவர்கள் எமது மண்ணை விட்டு மறைந்து 2019.09.17ம் திகதியுடன் அறுபது வருடங்கள் ஆகின்றன. அவர் சுமார் 48 வருடங்கள் மட்டுமே எமது பூர்வீக பூமியில் வாழ்ந்தவர். மிக இளமைக் காலத்திலேயே தான் உயிருக்கு உயிராய் வளர்ந்த தமிழரசுக் கட்சியையும் தனது அன்பு மனைவி, மற்றும் பாசமுள்ள ஐந்து பெண் பிள்ளை களையும் விட்டுப் பிரிந்தார்.

அவரது அரசியல் வாழ்வு பன்னிரண்டு ஆண்டுகள் மட்டுமே இருந்தது. இக்குறுகிய கால இடைவெளியில் அவர் சாதித்தவை ஏராளம். தமிழ் இனத் திற்காகவும் தமிழ் மண்ணிற்காகவும் நடாத்திய போராட்டங்கள் ஏராளம். தனது உடல் பொருள், ஆவி அனைத்தையும் தமிழ் மக்களுக்காகச் செலவிட்டார். அமரர் கு.வன்னியசிங்கம் போன்ற சாணக்கியமும், இலட்சிய மன உறுதியும் படைத்தவர்களை இன்று காணமுடியாது எனவே இப்பெருந்தலைவனின் கடந்து போன வாழ்வியலை நினைவு கூர்வது தமிழ்ப்பேசும் மக்களின் தலையாய கடமையாகும். அதன் விளைவே இச்சிறுமலராகும்.

கோப்பாய்க் கோமான் அமரராகிய அறுபது வருடங்கள் நிறை வடையும் இந்நாளிலே எம்மக்களின் அன்புக் காணிக்கையாக இந்நூல் வெளிவருவதையிட்டு நாம் ஆறுதல் அடைகின்றோம்.

இந் நினைவு மலருக்காக ஆக்கங்களைத் தந்தவர்களுக்கும் மிகவும் சிறப்பான முறையில் அச்சிட்டு வழங்கிய நல்லூர் மதிகலர்ஸ் அச் சகத்திற்கும் விசேடமாக எமக்குத் துணையாக நின்று உதவிகள் புரிந்த பாசமுள்ள கோப்பாய்க் கோமானின் பிள்ளைகளுக்கும் எமது தமிழரசுக் கட்சியின் சார்பிலும் என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அன்புடன்**
**ஆவுரன்.க.திரவியம்**
**மலர் தொகுப்பாசிரியர்**

**சிவன் வீதி,**
**ஆவரங்கால்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

தமிழர் தாயகத்தில் தமது தன்னாட்சி உரிமை பெற்று சமத்துவத் துடன் வாழவகைசெய்யவேண்டுமென்றதமது இலட்சிய வேட்கையுடன் வாழ்ந்துமறைந்த கோமான் கு.வன்னியசிங்கம் அவர்களது 60வது மறைவுதினமறைவைஒட்டி ஆவரங்கால் க.திரவியம் அவர்கள் வெளியிடும் "தியாகமாமலை" கு.வன்னியசிங்கம் அவர்களின் நினைவு மலருக்கு வாழ்த்துச்செய்திவழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். பெரியர் தந்தைசெல்வாவுடன் சேர்ந்து தமிழரசுக்கட்சியை நிறுவி தமிழரசுக்கட்சியில் கொள்கைகளை மக்களிடையே பரப்பும் பெரும்பணியில் தன்னை இணைத்துக் கொண்டவர் அமரர்.

கோப்பாய்த்தொகுதியின் பாராளுமன்றத்; தேர்தலில் நின்று வெற்றிபெற்றுகோப்பாய்த் தொகுதிமக்களின் மனம்நிறைந்த தலைவரானார். தமிழரசுக்கட்சியின் சாத்வீகஅரசியலில் செயற்பட்டு தன்னை அரசியலில் ஈடுபடுத்தினார். சட்டத் தொழிலில் பிரபல்யம் வாய்ந்தஅமரர் தந்தை செல்வாவுடன் சேர்ந்துகாலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்தார். அடி,உதைவாங்கி இரத்தம் சிந்தினார். சிங்களசிறிஎதிர்ப்புப் போராட்டத்தில் சிங்களச் சிறியைவாகனங்களில் அழித்ததற்காகச் சிறைசென்றார். தமிழுக்குத் தொண்டுசெய்வோர் சாவதில்லைஎன்போர் பெரியோர். அந்தவகையில் தமிழர் தம் விடுதலையைத் தமதுகுறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து மறைந்த தலைவர்களும் மறக்கமுடியாதமாமனிதர்களே.

அத்தகைய தலைவர்களின் தியாகம், அர்ப்பணிப்பு அரசியற்பணி, முதலியவற்றைத் தொகுத்து நூல் ஒன்று வெளியிடுவது சாலவும் சிறந்ததே. இந்நூலானதுதமிழர் கைகளிலுள்ள இளைஞர் இடத்திலும் இருப்பது முன்னைய தமிழரசுத் தலைவர்கள் என்ன செய்தார்கள். சிறைசென்றார்கள் என்பதை அறிந்திருக்கவேண்டிய இக்காலகட்டத்தில் கு.வன்னியசிங்கம் அவர்களின் 60வது மறைவுதினத்தில் ஆவரங்கால் க.திரவியம் அவர்கள் சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் ஒன்றினை அச்சிடுவது பயன்மிகுவரலாற்று ஆவனமாக இந்நூல் அமைந்திட வேண்டுமென எனது உணர்வு பூர்வமான நல்லாசியையும் நல்வாழ்த்துக்களையும் அமரரின் புகழ் என்றும் தமிழர் மனங்களின் நிறைந்திருக்கவேண்டுமென்றும் தெரிவித்தக்கொள்கின்றேன்.

நன்றிஉடன்

**இரா•சம்பந்தன்•பா•உ**
**திருமலை**
**தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்**

**நன்றி**
**"ஈழத்தமிழர்கள்**
**ஏமக்காகவாழ்ந்தவர்கள்"**
**சட்டத்தரணிகனகமனோகரன்•**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுத்தலைவர் வன்னியசிங்கம் தமிழர் தேசத்தின் சான்றோன்

செப்ரம்பர் 17 அமரர் வன்னியசிங்கம் அவர்கள் நினைவுநாள். தமிழர் தேசத்தில் தமிழினவிடுதலைக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஒரு தலைவர்.

1948 டிசம்பர் 18ஆம் நாள் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப் பெற்ற பொழுது தந்தை செல்வாவுடன் இணைந்து கட்சியைக் கட்டி யெழுப்பு வதில்,கட்சியைக் காத்துநிற்பதில் இன விடுதலைக்காக முழுமையாக அர்ப்பணிப்பதில் முன்னின்று செயலாற்றியவர் கோப்பாய் கோமான். தமிழரசுக்கட்சி மாநாடுகளில் தீர்மானங்களை எடுப்பதில் சிறந்த வொருமதியூகியாகவும், சாணக்கியமிக்கவராகவும் விளங்கியவர்.

தமிழரசுக்கட்சியை ஆரம்பித்ததிலிருந்து தந்தைசெல்வாவுடன் தலைவர்கள் நாகநாதன்,கோப்பாய் கோமான் சட்டக்கல்லூரி மாணவனான அமிர்தலிங்கம் முதலானோர் தமிழர் வாழும் தாயகத்தின், தமிழர் வாழும் இடங்களில், வடக்குக் கிழக்கின் மூலைமுடுக்கெல்லாம் சென்றுகட்சியைக் கட்டியெழுப்பவதில், வழி நடத்துவதில் பெரும் பங்காற்றியவர்களாவர்.

தமிழர் தாயகத்தின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்த தலைவர் தமிழரசுக்கட்சியின் தலைவராகவும் மாநாடுகளில் தலைவராகவும் தெரிவுபெற்றார். குறிப்பாக 1959ல் திருமலைமாநாட்டின் அச்சாணியாக விருந்து தலைமைதாங்கித் தீர்மானங்களை நிறைவேற்ற உழைத்தார்.

கோப்பாய் கோமானுடன் மனையாள் கோமதியும் குடும்பமும் தம்மைஅர்ப்பணித்தமையும் வரலாற்றில் பெருமைசேர்த்துக் கொண்டது. அவர் பொதுவாழ்வில் நேர்மை, தூய்மை, தியாகம், கொள்கை, இலட்சியப் பற்று வரலாற்றில் பெருமைசேர்த்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் விடுதலைப்போராட்டம் 1956 ஆனி 5ஆம் நாள் கொழும்பு காலிமுகத்திடலில் அன்றையபாராளுமன்றத்தின் முன்றலில் தனிச்சிங்களம் அரசகருமமொழிஎன்றுபாராளுமன்றில் பிரேரனைவந்த போது ஆரம்பித்தது.

அதனைஎதிர்த்தும் தமிழ்மொழிக்குச் சமவுரிமைகோரியும் சாத்வீகவழியில் காந்தியவழிப் போராட்டம் நடைபெற்றபொழுதுசிங்களத் தீவிரவாதிகளால் தாக்குதலுக்குள்ளானதலைவர்களில் வன்னியசிங்கம் இரத்தம் சிந்தினார். தளபதிஅமிர்தலிங்கத்தின் தலைபிளந்து இரத்தம் காலிமுகமைதானத்தைச் செங்களமாக்கியது. தலைவர் நாகநாதன் அணிந்திருந்தஉடைகள் கூட உருவப்பட்டன. தமிழர்போராட்டவரலாற்றில் இப்போராட்டம் முதலாவதாக வேபதிவுபெற்றது.

பாராளுமன்றில் சிங்களம் அரசுமொழிப் பிரேரனை மீது அப்பொழுது பிரதமர் பண்டாரநாயக்காவைப் பார்த்து "சிங்களசட்டத்தை எதிர்த்தமைக்கு எம்மைத் தூக்கிலிட்டால் அதற்குளம் உயிரைப் பலியிட ஆயத்தமாயிருக் கிறோம்"என்றுபிரதமர் உரைக்குத் தீரத்துடன் வீரத்துடன் பாராளுமன்றில் உரையாற்றினார் வன்னியசிங்கம். போராட்டங்கள் நாடு முழுவதும் பரவின.

1958இனக்கலவரம் இடம்பெற்றதுநாடுமுழுவதும் கலவரம் தமிழர் களுக்கு எதிராகப் பரவியது.தமிழ்த் தலைவர்கள் சிங்களச் சிறைகளில் அடைக்கப்பட்டனர். இரத்தக் கொதிப்பினால் அவதியுற்ற வன்னியசிங்கம் சிறையில் நோயுடன் போராடிக் கொண்டிருந்தார்.

தமிழர் சமூகத்தில் பிரிவினைகள் சாதிப்பிரச்சனைகளை ஒழித்துதமிழினம் ஒன்றுபடஅர்ப்பணித்துழைத்தார்.

இத்தனைஅர்ப்பணிப்பும், தியாகமும் நிறைந்ததலைவர் இதயநோயால் அவலமடைந்தாலும் இன விடுதலையேதலையாகவிருந்தார். மாரடைப்பநோய் அவர் உயிரைப் பறித்தநாள் செப்ரம்பர் 17ஆம் நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தியாகத்தின் தலைவரைதமிழினத்தின் விடுதலைக்கு அர்பணித்ததலைவரைதமிழினவிடுதலைக்குஅர்ப்பணித்தவர்கள்,நன்றிமற வாமல் அவரைநினைவு கூர்ந்துஎடுக்கும் நினைவுநிகழ்ச்சிகள் பெருமை தருகின்றன.

கோப்பாய் கோமான் எனப்பெயர் பெற்றதலைவர்,கோப்பாயில் அன்னாருக்குநினைவுநாள் நிகழ்ச்சிஆண்டுதோறும் தவறாதுநகழ்த்தப் பெறுவதும் அவர் கொள்கைப் பின் பற்றுவதும் எம் கடமைஆகும்.தமிழர் இயத்தில் என்றும் நிலைத்திருப்பார். தலைவர் வன்னியசிங்கம்,கோப்பாய் கோமான்.

**மாவை.சோ.சேனாதிபதிராசா.பா.உ**

**தலைவர், இலங்கைத் தமிழரசுக்கட்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தியாகமாமலை" வன்னியரின் மனையாள்
# கோமதி வன்னியசிங்கம்

தன்னிகரற்ற தலைவரோடு வாழ்ந்த மனைவி கோமதி வன்னியசிங்கம் அவர்கள் சிறி எதிர்ப்புப்போராட்டத்தில் மங்கயக்கரசி அமிர்தலிங்கமும், மங்களா கிறிஸ்தோப்பர் ஆகிய மூவரும் சிங்களச்சிறி அழிப்புப்போராட்டத்தில் கைதாகி மல்லாகம் கோட்டில் அடைக்கப்பட்டு இருந்த கோமதி அம்மாவையும் மற்றயோரையும் (கோடு) நீதிமன்றம் கலையும் வரை தடுத்து வைத்து விடுதலை செய்தார் நீதிபதி அவர்கள். கோமதி அவர்கள் சிறைப்பட்ட வேளை வன்னியசிங்கம் ஐயா கொழும்பில் கைதாகி சிறையில் இருந்தார். துணிந்து செய்தால் எதுவும் வெற்றி.

கோமதி அக்காவின் துணிவும் ஆற்றலும் இளைவயதுப் பெண்பிள்ளை களையும் தன் இல்லத்தில் பாதுகாத்துபாசறையாக்கி இரவுபகல் பாராது வருவோர் போவோர்க்கெல்லாம் அரசியல் விளக்கம் கொடுத்தும், அருமையான உணவும்கொடுத்து தனது கணவருக்கு வலது கரமாக இருந்து தன்ஐந்து பிள்ளைகளோடு மற்றவர்களையும் பாதுகாத்து வாழ்ந்தார். 1950.02.04 நடந்த இலங்கைச் சுதந்திரதினத்தை ஒட்டி தமிழ் மக்களுக்கு இது சுதந்திரம் அல்ல என்று நின்று யாழ் குடநாடு முழுவதையும் கடையடைப்புக்குத் தலைமைதாங்கி கடைகளைப் பூட்ட வைத்தவர் கோமதி அம்மா அவர்கள். பூட்டிய கதவுகளை திறக்க வைத்த ஜீ.ஜீ பொன்னம்பலத்தார் முன்னிலையிலேயே மாதரணியினர் வீறு கொண்டு வந்து திறந்த கடைகளை பூட்டவைத்ததோடு பூட்டிய கதவுகளைத் திறக்கவிடாது மறியல் போராட்டம் நடாத்தினார் கோமதி அம்மா. இப்படியான பெண்தலைமைகள் தமது கணவன் மாருடன் சேர்ந்து ஒரு சிலர் மட்டுமே அரசியல் நடத்தினார்கள். இது வரலாறு தந்த உண்மை.

**நன்றி**

**வாழ்வுடன்**

**கனடா.**

**கதிர்.பாலசுந்தரம்**

**தமிழரசு க.சி அவர்களின் தம்பியும்**

**யாழ்/யூனியன் கல்லூரி அதிபரும்**

**ஓய்வுநிலை அதிபர் , தெல்லிப்பளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வாவும் தமிழினமும்

தந்தை செல்வாவுக்கு இலங்கைத் தமிழர்கள் எல்லோரும் ஒன்று கூடி அவருக்கு கொடுத்த "மூதறிஞர்" என்ற பட்டத்துக்கு முற்றிலும் தகுதி யானவர். இவர் தமிழருக்காகப் பாராளுமன்றத்திலும் வெளியிலும் எப்படி நடந்தார் என்பதை இந்நூலில் எடுத்துக்காட்டப்படுகின்றது.

இலங்கையின் தேசியக் கொடியை 1948ம்ஆண்டு முன்வைக் கப்பட்டபோது தந்தை செல்வா அவர்கள் எதிர்த்தார். ஒரு தேசியக் கொடியா னது தேசத்தின் இலட்சியத்தையும் மக்களின் இதய மேம்பாட்டையும் காட்டி தேசியக் கொடி அமைய வேண்டும். ஒரு தேசத்தின் கொடி ஒரு இனத்தின் கொடியாக குறுகிவிடமுடியாது. இலங்கையில் பல இனமக்கள் இடமாக இருப்பதினால் இனத்தைக் குறிக்கும் கொடியாக குறுகி விடாமல் மக்கள் விரும்பும் கொடியாக கொடி உயர்ந்து நிற்க வேண்டும்.

உலக நாட்டில் நல்ல மாற்றங்கள் தோன்றி வரும் நிலையில் இலங்கை என்ற இந்த சிறிய நாட்டில் உயரிய இலட்சிய ரீதியில் கொடியை அமைக்கவில்லை.

நாட்டின் தேசியக் கொடி போன்றவை முக்கிய விடயங்கள் சாதாரண விடயமல்ல இவை நாட்டில் உன்னதமான உயர்ந்த இலட்சியக் கோட்பாட் டுடன் அணுகப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இனம் இன்னொரு சமூகத்தின் மீது வலுக்கட்டாயப்படுத்தி அவனது அரச பலம் கொண்டு திணிக்க முயலக்கூடாது

10ம் நூற்றாண்டு காலத்தின் வழக்கத்தில் இருந்த ஒரு தனியினத் தின் சிங்கக்கொடியை தற்போது இன்று இங்குள்ள பல இனமக்கள் வாழும் இலங்கையில் சிங்கக்கொடி உள்ளதை ஏற்கமுடியாது என்று திருத்தத்தைக் கொண்டு வந்தார். அரசாங்கத்தின் மொழி விடயத்திலும் சிங்கக்கொடி விட யத்திலும் நாம் காண்பது "சரணாகதி" அடைய மறுக்கும் ஒரு சாராகிய தமிழ் மக்கள் உங்களை எதிர்த்து வாழ வைக்கிறது. குடியுரிமையிலும் சரி மொழி யுரிமையிலும் ஏனைய விடயங்களிலும் சரி நீங்கள் உங்களிலும் அளவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறியதாக இனங்களை இன்னல் படுத்தி அழித்தொழிலுக்கும் நோக்குட னேயே செயற்பட்டு வருகிறீர்கள் இந்த அடிப்படையில் சிங்கள மக்களிடத்தில் ஒற்றுமையோ ஒருமைப்பாடோ காணமுடியாது. காணவுமில்லை.

நான் பிரதிநிதிப்படுத்தி நிற்கும் அளவுக்கு எம்மனதின் சார்பில் கொள்கையே பெரிதென மதித்து அதற்கு முதலிடம் கொடுத்து தன்மானத் தோடும் சுய கௌரவத்தோடும் வாழ விரும்பும் என் தமிழினத்தின் சார்பில் நான் உங்களால் கொண்டுவரப்படும் சிங்கக் கொடி நாங்கள், எங்கள் மக்கள் மதிக்கும் உரிய இடத்தில் இல்லை. இவற்றிலிருந்து ஒரு புதுத்தேசியத்தை நீங்கள் எழுப்பமுடியாது. எம்மினம் தமக்கென ஒரு தேசியத்தை ஏற்படுத்த வழி செய்கிறது வெளிப்படையாகும். ஆனால் இதைப் பிழையாக நாட்டைப் பிரித்தல் என்பத அல்ல சிங்கள மக்களின் மனங்களில் எனது பேச்சு சிங்கள மக்களுக்கு எடுபட வேண்டும். நாங்கள் நாட்டைப் பிரிக்கவுமில்லை, பிரிக்க விரும்பவும் இல்லை. நாங்கள் இந்தியாவுக்கு போவோமென்று சொன்னார்கள். நான் சொன்னேன் நின்று இங்கு எதிர்த்துப் போராடுவோம் என்றேன். மலை நாட்டு மக்களின் உரிமையைப் பறித்து நாடற்றவர் ஆக்கினீர்கள், அரசியல் அனாதை ஆக்கினீர்கள் பல்வேறு மொழிகள் பேசுகின்ற மக்கள் தீர்ப்புத்தான் ஜனநாயகம் என்றால் ஒரு கூட்டாட்சி முறையிலேயும் சாத்தியப்படும். தமிழ் மக்களிடம் உள்ள ஐயப்பாடு என்ன என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வில்லை. 70 ஆண்டுகாலமாக தமிழ் மக்களின் தீர்வுத் திட்டங்களை மதிக்க வில்லை. அதை விடுத்த மாறி மாறி அரசாங்கத்தை பொறுப்பெடுத்து நடாத்து கின்ற மனநிலையிலேயே இருக்கிறீர்கள். தமிழ் மக்களின் மேல் இருந்த நம்பிக்கையும் தமிழ் மக்களை அரசாங்கம் நடாத்துகின்ற முறைகளையும் ஏமாற்று வேலைகளையும் கண்டு 30ஆண்டுகளாக வாலிபத்தலைமையால் ஏற்பட்ட மனித அழிவுகள் சொத்து அழிப்புக்கள் யாவும் சிங்களத் தலைமை யால் தான் ஏற்பட்டது என்பதை உலகநாடுகள் தெட்டத் தெளிவாகக் கண்டு கொண்டன.

தமிழ் இனம் ஏமாந்த இனம் என்பதை அயல்நாடுகளும் கண்டு கொண்டன. நாம் ஏமாற மாட்டோம். இதன் காரணத்தினால் தான் மாறி, மாறி அரசாங்கம் நாடாத்தும் அரசியல் செய்யும் கட்சிகளை நம்பாமல் புதிய ஒரு வழிக்குச் செல்வோம், அதுபற்றித் தீர்மானிப்போம் என்று சுமந்திரன் பா.உ போன்றவர்கள் இந்தியாவில் வைத்துப் பேசியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு, கிழக்கில் அபிவிருத்தியைக் காட்டி தமிழினத்தை அழித்துக் காட்டும் முடிவிலேயே சிங்கள அரசாங்கம் நடாத்தி வருகிறது.

சேர்ந்து வாழ்வதையும் கேட்கின்றோம். பிரிந்து வாழ்வதையும் கேட்டு நிற்கின்றோம். எதையும் தீர்மானிக்கமுடியாமல் சிங்களக் கட்சியாலும் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு கிடையாது. "தமிழர்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என விரும்புகிறேன்" என்று மூதறிஞர் தந்தை செல்வா அவர்கள் தமிழ் மக்கள் முன்னனிலையில் கவலையோடு சொல்லிச்சென்றார்.

1948ம் ஆண்டிலிருந்து போராடி வருகின்றது எங்கள் தமிழரசுக் கட்சி தமிழர்களுக்கு நியாயம் ஒன்று கிடைக்க வேண்டுமென்று போராடி வருகின்றது. நாங்கள் பணிந்து போக மாட்டோம் இனத்தாலும் மொழியாலும் தமிழர் நாம் வேறுபட்டவர்கள்நாங்களும்வாழ வேண்டும். சிங்கள மக்கள்போல உரிமையுடைய மக்களாக தலை நிமிர்ந்து வாழ வேண்டும். இதுவே எனது இலட்சியம் என்றார்.

**நன்றி**
**தமிழரசுக்கட்சியின்,**
**இலட்சியப்பாதை**
**அ.அமிர்தலிங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் தலைமையை தந்தை ஏற்ற பொன்நாள் 1973ம் ஆண்டு ஆகும்.

1973ம் ஆண்டு 09ம் மாதம் 17ம் திகதி தமிழரசுக்கட்சி மாநாட்டில் தளபதி அ.அமிர்தலிங்கம் பா.உ அவர்கள் தமிழரசுக் கட்சியின் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். அமரரின் உரைகள் சில தரப்படுகின்றன.

உடனடியாக நாம் தரக்கூடியது பொலிகாரின் அடி பட்டாளத்தினரின் இடி. மற்றும் சிறை வாழ்க்கை சில வேளைகளில் அது வீர மரணமாகவும் வரலாம். இவற்றினை நாம் தாண்டிச் சென்றால் விடுதலை பெற்ற தமிழீழம் சாதி, பேதம் அற்ற ஓர் சிறந்த தமிழர் நாடு அமையலாம். ஈழத்தமிழகம் மலர நான் உங்கள் முன் நிற்கிறேன். இத்தாலிய நாட்டு கரிபால்டி தன் மக்களை அழைத்தது போல் உங்களை நாம் அழைக்கின்றோம். இறுதி வரை தமிழ் மக்களின் விடிவுக்காக என் உயிரைக் கொடுத்தும் மக்களோடு நிற்பேன். எனது உயிருக்கு ஆபத்து உண்டு என்பதை அறிவேன். துப்பாக்கிக் குண்டுகள் எமது விளையாட்டுப் பந்து என்று பேசியிருக்கிறேன். என் உயிர் பிரிந்தாலும் அது தமிழுக்காக பார்ப்பேன் என் ஆத்மா சாந்தியடையும் வள்ளுவம் தந்த மொழிக்கு ஒப்பான

"தன்னுயிர் நீர்ப்பினும் செய்யற்க தான் பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை"

என்று தன்னைத் தன் தமிழ் அன்னைக்கு அர்ப்பணித்தவர் அமிர் அவர்கள்.

"தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்"

இது தர்மம் கருமத்தை மேன்மேலும் காண்போம்... இன்று கட்டுண் டோம் பொறுத் திருப்போம் காலம் மாறும் தருமத்தை அப்போது வெல்லக் காண்போம் என்றான் பாரதி அமிர் அண்ணர் எமது இன விடுதலைக்கு முன் மாதிரியானவர். இந்தியநாடு அரணாக இருக்க வேண்டும் என்றார். தனது உயிரை தமிழர் விடுதலைக்கு என்றே வளர்த்தவர். இந்திய நாட்டு தலைவி இந்திராவிடம் சென்றார். இந்திராவை தமிழரின் நண்பராக்கினார். அவர்களை அணுகி தமிழர் பிரச்சனைகளை எடுத்துக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மையும் வீரமும் அறிவும் ஆற்றலும் கொண்ட தமிழ் பண்பாளன் என்று மொரார்ஜி புகழ்ந்தார். அமிர் அவர்கள் இந்தியத் தலைவர்களை சந்தித்து ஆதரவு தேடினார். 26.08.1927 ஆண்டு பிறந்தவர் யூலை 13ம் திகதி 1989ம் ஆண்டு கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டார்.(13.07.1989) தந்தை தமிழ் ஈழம் கோரினார் இக்கோரிக் கையை அமிர் தலைமை விட்டு விடவில்லை. தொடர்ந்து போராடியது சுதந்திர இறைமையுள்ள மத சார்பற்ற சோசலிச தமிழ் ஈழத்தை நிறுவிட உழைப்பேன் என்றார். பாராளுமன்றத்திலும் தமிழ் ஆங்கிலத்திலும் எடுத்துரைத்தார். மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஏற்கின்றோம். இது தமிழர்களுக்குள்ள பிரச்சனைக்கு இச்சபைகள் எவ்விதத்திலும் ஏற்புடையதல்ல என்று பேசினார். கலாநிதி நீலன். திருச்செல்வம் அவர்களின் அறிக்கை இதன் தார்ப்பரியத்தைக் கூறியுள்ளது. இதனால் மாவட்ட அபிவிருத்திகள் வருவதை ஏற்று சில சலுகைகளைப் பெறுவோம் என்றார்.

1947ம் ஆண்டில் பல்கலைக் கழகத்தில் எமக்கு ஒரு பல்கலைக் கழகமும் தனிநாடும் வேண்டுமென்று பேசினார். தந்தை வழி சென்று நடப் பதாக உறுதி பூண்டார். பொருளாதார அநீதியும் ஏழ்மையின் கொடுமையும் வர்க்கச் சுரண்டலும் இளம் உள்ளங்களில் ஏற்படுத்தும் தாக்கத்தை தான் அறிவேன் என்று பேசி பல்கலைக்கல்லூரியில் மாணவர் முன்னிலையில் பேசினார். சொற்போரும் நடாத்தினார்.

வெளிநாடுகளில் வாழும் அன்புச் சகோதரர்கள் தான் தமிழீழ விடுதலை இயக்கத்தை உலகறியச் செய்தனர். விளையாட்டு மைதானத்தை ஈழப்போராட்டக் களமாக மாற்றினார்கள். ஐ.நாடுகள் மன்றத்தில் இரண்டு நிமிடங் கள் தமிழ் ஈழத்தின் குரலை ஒலிக்கச் செய்தார். திரு வைகுந்தவாசன் இப்ப டிப்பட்ட எம் இளம் விடுதலை வீரர்களின் பங்களிப்பை எவரும் மறக்க முடியாது.

எமது விடுதலைப் போர் ஈழ மண்ணில் தான் நடைபெற வேண்டும். தொலை நாடுகளில் இருப்போர் நடத்த முடியாது. இலங்கையில் வாழும் 35 இலட்சம் மக்களுக்கும் எப்படி தமிழ் ஈழத்தை பெற வேண்டுமென்று தீர்மா னத்தை எடுத்து சுதந்திரத்தைப் பெற்றுத் தரப் போவது இல்லை. எமது சுதந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரத்தைப் பெற்றுத்தரப் போவது இல்லை. எனது 35 வருட அரசியல் அனுபவத்தில் நான் அறிந்திருக்கிறேன். உண்மையும் அதுவே. தலைவர் தந்தை அவர்கள் எத்தனையோ விளக்கங்களை அளித்தும் 1975ம் ஆண்டு பண்டா செல்வ ஒப்பந்தத்தின் பலாபலன்கள் என்ன என்பதை எனது இளமைத் துடிப்பில் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதென ஒப்புக் கொண்டேன். ஓர் இயக்கத்தின் பொறுப்பு வாய்ந்த சபை ஒரு முடிவுக்க வந்த பின் அந்த முடிவையே தன்கருத் தாக ஏற்று செயற்பட வேண்டியது இயக்க உறுப்பினரின் கடமையாகும். தற்பெருமையால் தான் பிடித்த முயலுக்கு மூன்றுகாலென்று முற்படக்கூடாது. தமது வாழ்வில் பல ஆண்டுகளாக இனத்துக்காக சிறையில் செலவிட்ட தியாகச் சுடர்கள் காசி ஆனந்தன் வண்ணை ஆனந்தன் மாவை சேனாதிராசா, சத்தியசீலன் போன்றவர்கள் பட்ட துன்பங்கள் மறக்கமுடியாது. தமிழும் மொழியும் 4500 ஆண்டுகளுக்கு முன்தோன்றிய மொழியை நாம் பாதுகாக்க வேண்டும். இலங்கை சுதந்திரம் பெற்ற பின் மாறி, மாறி வந்த சிங்கள அரசுகள் தமிழ் இனத்தின் உரிமைகளை ஒன்றோடு ஒன்று முட்டி மோதிப்பறித்த வரலாற்று உண்மைகளைத் தான் நாம் கண்டு கண்ணீர் விட்டிருக்கிறோம்.

**நன்றி**

**தமிழரசுக்கட்சியின்,**

**இலட்சியப்பாதை**

**அ.அமிர்தலிங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தந்தை செல்வாவின் மனம் நிறைந்த மூத்த தலைமகன்"

## ஆவூரன் க.திரவியம் J.P

தந்தை செல்வாவின் மனம் நிறைந்த மூத்த தலை மகனார். கோப்பாய்க் கோமான் கு. வன்னியசிங்கனார்.

தமிழரசுக்கட்சியின் வழிநடத்தல்.சீரிய பண்பு கலங்காத நெஞ்சம் நேரிய வழியும் தலைமைக்குத் தகுதியான தன்னம்பிக்கை மக்களை தன் வயப்படுத்தும் தலைமை, கொள்கைக்கு அணிசேர்க்கும் ஆணித்தரமான பேச்சு, சமயப்பற்றும் தமிழ்பற்றும் கொண்ட மாவீரன்.

வாழ் எடுத்து வீசியவனில்லை தன் அறிவால் வாய்விட்டுச் சிரிப்ப வர்களை தமிழரசு என்னும் விருட்சத்துக்குள் அடக்கியவர். நான்கு ஆண்டுகள் தமிழரசு மாநாட்டுக்கு தலைமையை ஏற்று தன்னை அலங்கரித்தவர். தமிழ் முஸ்ஸீம் மக்களின் மனங்களை வென்றவர். கோப்பாய்த் தொகுதியின் கோட்டைக்குள் அரசாட்சி செய்து கோப்பாய்த் தொகுதியை தமிழரசுக் கட்சியின் கோட்டையாக்கி தமிழ் அரசாட்சி செய்தவர் தோல்வியை கணாத தலைவர் களை கோப்பாய்த்தொகுதிக்கு தந்து தமிழரசுக்கட்சியின் விருட்சத்தை வளர்ந்து சென்றவர் எங்கள் கோப்பாய்க் கோமான்.கு.வன்னியசிங்கம் பா.உ ஐயா (அவர்11 காற்றடிக்கும் முறியாத மூங்கில் மரம் அவர். நீண்டுயர்ந்த தென்னைமரம் காய்த்துக்குமுங்கும் இளநீர் காய்த்து மக்களுக்கு தமிழரசுப் பற்றினை இளநீராய்) ஊற்றிச் சென்றவர். நல்ல தலைவர்களை கோப்பாயில் வளர்த்தவர். அரச மரம்போல் அசையாது நிற்கும் பெரும் விருட்ஷம் எங்கள் கோமான் கு.வ காற்றடிக்கும் வேளையில் சாய்ந்து ஒதுங்கும் மூங்கில் மரமில்லை. நீண்டு உயர்ந்த தென்னைமரம் இளநீர் காய்த்துத் தூங்கும் இளநீரை மக்களிடம் பாச்சி தமிழரசுகட்சியை வளர்த்தவர். கொள்கை மற்றும் மதி நுட்பமும் தியாக சிந்தனையும் தமிழ் மக்கள் மேல் தீராத பற்றும் கொண்டவர். ஜாதி,மத மேலாண்மைக்கு இடம் கொடுக்காத மாவீரர் 1957ம் ஆண்டில் சமூகக் குறைம்பாடு சட்டத்தை கொண்டுவந்தார்.

பல ஆலயக் கதவுகள் சமூக வேறுபாடு இன்றிச் சகலருக்கும் திறந்து விடப்பட்டன. தேனீர்கடைகள் சமத்துவம் பேணப்பட்டு சமாதானமாக திறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடப்பட்டன. நான்கு மாநில மாநாடுகளுக்கு தந்தை அவர்களால் ஏகமனதாக தமிழரசுக் கட்சியின் தலைமையை ஏற்றார். தந்தை அவர்கள் வன்னியரின் துணைக்காகத் தானே பொதுச் செயலாளர் பதவியை ஏற்று தமிழரசுக் கட்சியை வழி நடத்தினார். கொழும்பு கோல்பேஸ்திடலில் புல்தரைக்கு செந்நீர் உற்றி வளர்த்தார்கள்.

தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற தணிப்பெரும் தலைவர் தலைமைப் பதவிகள் வன்னியரைத் தேடிச் சென்றது. 1956ம் ஆண்டும் 17,18,19ம் திகதிகளில் திருமலை முற்றவெளி மாநாட்டில் பெரும்திரளான மக்கள் முன்னிலையில் நான்காவது தடவையும் தமிழரசுக்கட்சியின் தலைவரானார். வன்னியர் கொண்டு வந்த சமூக குறைப்பாட்டுச் சட்டங்களை மக்களின் நலன் வேண்டி திரு.சி.கதிரவேலுப்பிள்ளை பா.உ அவர்களே வழக்குகளை நடாத்தி வெற்றியும் கண்டார்.

வன்னியர் அவர்கள் 12 ஆண்டுகாலம் பாராளுமன்ற படிகளை கடந்தவர் தனது தலைமைக் காலத்தில் சிங்கள அரசுக்கு ஒரு வருடகால அவகாசம் இட்டவர் நாலு அம்சக் கோரிக்கையை வைத்து அதன் பதிலை ஒரு வருடத்தில் தர வேண்டுமென்று கட்டளை இட்டவர். 1957.08.20ம் திகதிக்கு முன்னர் 1947ம் ஆண்டில் பா.உ GG.பொன்னம்பலத்தினால் கோப்பாய்த் தொகுதிக்கு பாராளுமன்ற உறுப்பினராக போட்டியிட வைத்தார். வெற்றியும் கண்டவர். கோமான் வன்னியர் அவர்கள். 19.08.1956ம் திகதி திருமலை மாநாட்டில் இறுதிநாள் கூட்டத்தில் நாலு அம்சம் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டு திருமலைத்தீர்மானம் என்று அமைந்தது.

1. தமிழ் மக்கள் பெரும்பாலாக வாழும் பிரதேசங்களை சமஷ்டி அரசுக்கு உட்பட்ட ஒன்றோ, அதற்கு மேற்பட்டதோ தமிழ் மொழிவாரி அரசு அல்லது அரசுகளாக அமைக்கவும்.

2. சிங்களத்தோடு பரிபூரண சம அந்தஸ்துள்ள ஆட்சி மொழியாக தமிழுக்கு உரிய இடத்தை மீண்டும் அளிக்கவும்.

3. இன்றைய (அன்று) குடியுரிமைச்சட்டங்கள் நீக்கப்பட்டு இந்த நாட்டை தமது தாயகமாகக் கொண்ட எல்லோருக்கும் ஒரு சிறிய வாசகால யோக்கியதையின் அடிப்படையில் பூரண பிரஜாவுரிமையை அங்கீகரிக்கும் குடியுரிமைச் சட்டங்களை ஆக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பாரம்பரியத் தமிழ் பிரதேசத்தில் திட்டமிட்ட சிங்களக் கடியேற்றத்தை உடன் நிறுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரியும் இம்மாநாடு தீர்மானம் எடுக்கின்றது.

மேற்படி தீர்மானங்கள் இன்றும் முன்பு போல் தமிழரசுக்கட்சி அரசாங்கத்துடன் பேசிக்கொண்டே வருவது மக்கள் அறிந்திருப்பார்கள்.

தமிழரசு பற்றி அறிந்தவர்கள் தமிழரசக்கட்சி கண்மூடி வாய்பொத்தி கிடக்கவில்லை. தமிழ் மக்களின் ஏகபோகஉரிமைகளைக் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள் என்பது கண்கூடு. தமிழ் பாராளுமன்ற உறுப்பி னர்கள் தமது பதவியை காப்பாற்ற பாராளுமன்றம் செல்லவில்லை. தமிழ மக்களின் உரிமைக்காக வாதடிக் கொண்டே இருக்கிறார்கள்.

1957ம் ஆண்டில் சமூகக் குறைபாட்டு சட்டத்தை கொண்டு வந்த கோமான் வன்னியனார் தேனீர் கடைப் பிரவேசங்களை முன்னின்று செய்ய தமிழரசுக்கட்சியால் வன்னிய சிங்கம் ஐயாவும் மல்லாகம் சு.நடராசா சென்ற்றர் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களும் பொறுப்பாக நியமிக் கப்பட்டனர். வன்னியரின் அழைப்பின் பேரில் யாழ் நகரம் மேலும் இருந்த தேனீர் கடை உரிமையாளர்கள் அனைவரும் யாழ் மாநகரசபை, உணவுச்சாலை உரிமையாளர்கள் யாவரும் சாதிபேதம் பாராட்டுவதை கைவிடுவதென ஏகமனதார தீர்மானித்தனர்.

தீண்டாமையை நீக்குவதற்கு அன்றே ஆரம்பிக்கப்பட்டு தீண்டாமை ஒழிப்பு வாரத்தில் சம்பந்திப்போசனம் முதலிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு கிராமம் தோறும் சமபந்திப்போசனங்கள் நடாத்தினார்கள்.

இதே வேளையில் தான் தமிழினத்திற்கும் தமிழரசுக்கட்சிக்கும் பேரிடி வீழ்ந்தது. 1959ம் ஆண்டு புரட்டாதி மாதம் 17ம் திகதியன்று வன்னியரை நம்பி இருந்த மக்களையும் தமிழரசுக்கட்சியையும் விட்டுப் பிரிந்தார். வன்னியரின் இழப்பு கட்சிக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியாரின் அப்பழுக்கற்ற தியாகத்தாலும் மெய்வருத்தம் பாராத உழைப்பினாலும் வன்னியர் மறைவு திடீரென நடந்து விட்டது. தந்தை அவர்கள் கண்ணீர் விட்டுக் கலங்கினார். தமது வலது கரத்தை இழந்ததாக அழுதார்.

1966ம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தலை எதிர்கொண்ட கட்சி 19 தொகுதிகளில் 15 தொகுதிகளை வெற்றி கொண்டது. அமரர் கு.வன்னியசிங்கம் ஐயாவின் அப்பழுக்கான சேவையும் தியாகமும் தமிழ்மக்களை உணர்வுபூர்வமாக வெற்றிப்பாதைக்கு இட்டுச்சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A தன்னாட்சிக்கு வித்திட்ட - தை பத்து

அரசியல் கலப்பற்ற வகையில், யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1974 ஜனவரி முதல் வாரத்தில் வெகுசிறப்பாக - மக்களின் கரை காணாத உணர்ச்சிப்பெருக்கின் மத்தியில் நடைபெற்றது. அரசாங்கம் எவ்வளவோ இடையூறுகளை ஏற்படுத்தியும், மிக வெற்றிகரமாக மாநாட்டை நடத்தி, இறுதி நாளான10ஆம் திகதியன்று 50,000க்கு மேற்பட்ட மக்கள் உலகத் தமிழ் அறிஞர்கள் தமிழின் பெருமையை எடுத்து விளக்கு வதைக் கேட்கக்கூடிய கூட்டத்தின் மீது, பொலீசார் எவ்வித காரணமுமின்றித் தாக்குதல் நடத்திய காரணத்தினால், ஒன்பது பேர் மின்சாரம் தாக்கி இறந்தார். பொலீசாரின் நடத்தை பற்றி விசாரணை நடத்துமாறு, அரசாங்க ஆதரவாளர் உட்பட, தமிழ் மக்கள் ஏகோபித்துக் கோரியும் அரசாங்கம் மறுத்துவிட்டது. மக்கள் நிறுவிய இரண்டு முன்னாள் நீதியரசர்களையும் ஒரு முன்னாள் மேற்றிராணியாரையும் கொண்ட விசாரணைக்குழு, பொலீசாரின் செயலே - அம் மரணங்களுக்குக் காரணம் என்று தீர்ப்பு வழங்கியது. இச்சம்பவமும், அதையொட்டி அரசாங்கத்தின் உதாசீனமும் "தமிழன் தன்னாட்சி பெற்றாலன்றி வாழ முடியாது" என்ற உறுதியை - இதுகாறும் அந்தக் கொள்கையை ஏற்காதிருந்த பல்லாயிரம் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியது.

## B தமிழரசுக்கட்சி இன்றேல்...?!

அரசியற் சட்டத்தை ஆக்கி நான்கு ஆண்டுகளுக்கிடையில், "அதைத் திருத்தி, தமிழ்மொழி உரிமைகளை அளிக்க ஆயத்தம், பிரிவினை கோராதீர்!" என்று இலங்கரத்தினா போன்ற அமைச்சர்களை அலற வைத்தது எம்மியக்கம்!

தமிழரசுக்கட்சி இருந்திருக்காவிட்டால் - தனிச்சிங்களம் நாடு முழுவதிலும் எப்பொழுதோ முடிந்த காரியமாயிருக்கும்!

"தமிழ்ப்பிரதேசம்" என்பது ஒன்று உண்டென்பதையே மக்கள் மறந்திருப்பார்கள்!

சிங்களத் திணிப்பினால் இளஞ் சந்ததியின் கல்வி மொழி, பேச்சுமொழி எல்லாமே சிங்களமாக மாற்றப்பட்டுத் தமிழ் இனம் அழிவுப்பாதையில் அதிவேகமாகப் போயிருக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனையையும் தடுத்த நிறுத்தி, தமிழனைத் தன் தனித்துவத்தைக் காக்க வேண்டுமென்பதை உணரச் செய்து, தனித்துவத்தைக் காப்பதற்குத் தமிழனுக்கு ஒரு நாடு வேண்டுமென்பதை அறிவுறுத்தி, எம் முன்னோர் "தம் சொந்த நாட்டோடு வாழ்ந்தனர்" என்பதை நினைவுறுத்தி, "நாம் வாழ வேண்டுமானால் எம் நாட்டை நாமே ஆள வேண்டும்" என்பதை ஆளப்பதிய வைத்து, அந்த இலட்சியத்தின் அடிப்படையில் அத்தனை தமிழ் அரசியற் கட்சிகளையும் ஒன்றுபடுத்தி, தமிழனுடைய இந்தக் கோரிக்கையின் நியாயத்தை உலக அரங்கிலும் ஓரளவு உணரச் செய்து, வீறுகொண்டேழுழுந்த இளந் தமிழ்ச் சந்ததியை - தன்மானத்தோடு தமிழ் மானங்காக்கவும், தமிழன் ஆட்சியை நாட்டவும் தியாக மார்க்கத்தில் - விடுதலைப்போர் வழியில் நடக்கச் செய்திருப்பது எம்மியக்கமே!

இருபத்தைந்து வருடங்களாக நாம் நடந்த இலட்சியப் பாதையில், நாம் நடத்திய சாதனைகள் இவை!! ஆனால், எம் இறுதி சாதனையே மகத்தாக இருக்க வேண்டும். அதுதான் ஓர் சுதந்திர, சமத்துவம் மிளிர்கின்ற, சமதர்மம் நிலைநாட்டப்பெற்ற தமிழ்ஈழத்தைக் காண்பது.

சேறுகள், சகதிகளைத் தாண்டி -அந்த இலக்கை நோக்கிச் செல்லும் நேரிய பாதையில் தமிழ் இனத்தைக் கொண்டு வந்த விட்டிருக்கின்றோம். சுதந்திர சூரியனின் இளங்கதிர்கள் மெல்லக் கீழ் வானத்தை வெளுக்கச் செய்யத் தொடங்கிவிட்டன!தியாகி சிவகுமாரன் பேன்ற விடிவெள்ளிகள் தோன்றிவிட்டார்கள்! தொடர்ந்தும் செல்வோம்! நாம் நிச்சயம் வெல்வோம்!

வாழ்க தமிழ்!
வளர்க தமிழின ஒற்றுமை!!
வருக தமிழ் ஈழம்!!!

**நன்றி**

**தமிழரசுக்கட்சியின்.**

**இலட்சியப்பாதை**

**அ.அமிர்தலிங்கம் பா.உ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒத்துழைத்துப் பயனில்லை - தியாக வரலாறு தரும் பாடம்

இந்த நிலையை உருவாக்கியதே- தந்தை செல்வநாயகத்தின் தலைமையின் சாதனையாகும். பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியும், தென்னி லங்கை அரசியற் கட்சிகள் ஒவ்வொன்றோடும் ஒத்துழைத்துப் பார்த்தோம். இடதுசாரிக் இகட்சிகளோடு -1953 ஆம் ஆண்டு பண்டாரநாயக்காவோடு -1957இல் ஒப்பந்தம் செய்தோம். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சி அமைக்க, ஆதரவு கொடுக்கச் சம்மதித்தோம். 1965ஆம் ஆண்டு திரு.டட்லி சேனநாயக வோடு ஒப்பந்தம் செய்து, அவரை ஆட்சிபீடம் ஏறச்செய்தோம். அத்தனை சிங்கள அரசியற் கட்சிகளும் தலைவர்களும் எமக்குத் தந்த பாடம் - அவர்கள் யாரும் எம் உரிமைகளை வழங்கத் தயாரில்லை, அவர்களை நம்பிப் பயனில்லை" என்பதேயாகும். தாம் அதிகார பீடம் ஏறுவதற்கு எம்மை ஏணியாகப் பயன்படுத்திய பின், எம்மை உதைத்துத் தள்ளுவார்களேயன்றி - தமிழ் இனத்தையும் சிங்கள இனத்தின் நிலைக்கு உயர்த்தவே மாட்டார்கள்.

"தன் கையெ தனக்குதவி
தமிழரசே தமிழர்க் குதவி"

என்ற தாரக மந்திரத்தை, அனுபவத்தால் படித்தோம்.

### இருபத்தைந்து ஆண்டுகளில் எதைச் சாதித்தோம்?

சாதியினால் சமயத்தினால், பிரதேசத்தினால் பிளவுபட்டுக் கிடந்த தமிழனை ஒன்றுபடுத்தினோம்!

அரசியல் கட்சிகளாகப் பிரிந்து அல்லற்பட்ட தமிழினத்தை, ஒரே அணியில் - தமிழர் கூட்டணியாகச் சேர வழிவகுத்தோம்.!

1956ஆம் ஆண்டு, "24 மணித்தியாலத்தில் நாடு முழுவதும் சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவோம்" என்று கூறிய ஆட்சியாளரை, இருபது வருடங்களின் பின்னரும் -மொழிப்பிரச்சினை தீரவில்லை என்பதை ஏற்றுக் கொண்டு, "அரசியல் அமைப்பில் தமிழ் மொழி உரிமையை அளிக்க நாம் ஆயத்தம்" என்று கூற வைத்திருக்கிறோம்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழனுக்கு ஒரு தனிப் பிரதேசம் உண்டு. அதைப்பாதுகாப்பது தமிழ் மக்களின் கடமை மாத்திரமல்ல, உரிமையும் கூட என்று. தமிழ் மக்கள் மத்தியில் இடது சாரிக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் தானும் ஒப்புக்கொள்ளச் செய்திருக்கிறோம்!

தமிழ்த்தேசிய இனத்திற்குப் "பிரதேச சுயாட்சி வழங்கவேண்டு மென்று நாம் ஆரம்பத்தில் கோரியபோது, "தமிழ்ப்பிரதேசம் என்று ஒன்றில்லை என்றும். நாடு முழுவதும் எல்லோர்க்கும் சொந்தம்" என்று பிதற்றிய இடது சாரிகளை - இன்று, :தமிழ்ப் பிரதேசமுண்டு தமிழ்த் தேசிய இனத்திற்குப் பிரதேச சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்றும், அதற்காகத் தாங்களும் போராடத் தயாரென்றும்" ஏற்றுக்கொள்ள வைத்திருக்கிறோம்!

தமிழன் தான் தனித்தேசிய இனம் என்பதை, உணரச் செய்திருக் கிறோம்!

தமிழ்த் தேசிய இனத்திற்கு, "தன்னாட்சி பிறப்புரிமை" என்பதைத் தெரிய வைத்திருக்கிறோம்!

தமிழ் மக்களின் எதிர்ப்பச் சக்தியைத் திரட்டி, சிங்களத்திணிப்பை - ஒவ்வொரு கட்டத்திலும் எதிர்த்து வந்திரக்கிறோம்!

இதனால் நீர்கொழும்பு, சிலாபம் போன்ற பகுதிகளில், இன மாற்றத்தினால் தமிழ்க் கலமே - சிங்கள இனமாக மாறிய நிலை ஏனைய இடங் களிலும் ஏற்படாது - தடுத்த நிறுத்தியிருக்கிறோம்!

எமது எதிர்ப்பியக்கம் இல்லையேல் தமிழ்ப் பிரதேசங்களிற் கூடச்சகல நிர்வாகமும் தனிச் சிங்களமாயிருக்கும்!

அப்படி மாற்ற முற்பட்டபோது 1961ஆம் ஆண்டுச் சத்தியாக்கிரகத்தி னால் அதை முறியடித்தோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியத்தின் தலைமகன் கேப்பாய்க் கோமன் வன்னியசிங்கம்

கோப்பாய்க் கோமான் வன்னிய சிங்கம் அவர்கள் கொல்லங்கலட்டி என்னும் கிராமத்தில் சட்டத்துறையில் பிரபல்யம் அடைந்த வழக்கறிஞர் வன்னித்தம்பி குமாரசுவாமிக்கு1911ம் ஆண்டு 10ம் மாதம் 12ம் திகதி பிறந்தார். கலைமானிப் பட்டதாரியான இவர் பின்பு சட்டம் பயின்று தந்தை செல்வநாயகம் கீழ் ஒரு வழக்கறிஞராகப் பணிபுரிந்தார். தொடர்ந்து சட்டத்துறையில் உயர் கல்வியை மேற்கொண்டு சட்டநிபுணர் (Barrister) பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

இந்நிலையில் சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் 1947ல் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் வந்தது. இதில் S.J.V செல்வநாயகம் அவர்களின் சிபார்சின் பிரகாரம் திரு.கு.வன்னியசிங்கம் கோப்பாய்த் தொகுதியில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். சட்ட வல்லுனர் ஜி.ஜி.பொன்னம்பலம் Q.C தலைமையிலான தமிழ்க்காங்கிரஸ் கட்சி மொத்தம் 7இடங்களில் ஜீ.ஜீபொன்னம்பலம் S.J.V செல்வநாயகம், E.M.V நாகநாதன் வன்னியசிங்கம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1947ம் ஆண்டு நடைபெற்றநாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றியைப்பெற்று D.S.சேனநாயக்கா பிரதமரானார். டீ.எஸ் அவர்கள் ஓர் இனவாத சிந்தனைப்போக்கும் உடையவர். இதனால் உந்தப்பட்ட அவர் 1948ல் இந்திய பிரஜா உரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்து மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்தார். இதன் மூலம் அவர்கள் தமது வாக்குரிமையை இழந்ததுடன் நாடற்றவர் ஆக்கப் பட்டனர். மலைநாட்டுத் தமிழருக்குப் பாதகமாய் அமைந்த இச்சட்டத்திற்கு கைத்தொழில் மீன்பிடி அமைச்சராய் இருந்த ஜீ.ஜீ பொன்னம்பலம் ஆதரவு வழங்கினார்.

ஜீ.ஜீயினுடைய துரோகத்தனத்தைக் கண்ட கு.வன்னியசிங்கம் மிகவும் வேதனைப்பட்டார். உடனடியாக எஸ்.ஜே.வி மற்றும் டாக்டர் நாகநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோருடன் கலந்துரையாடிவிட்டு தமிழ்க்காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேறினார். அப்போது புதிய கட்சியொன்றைத் தாம் ஆரம்பிக்க வேண்டுமென திடசங்கற்பம் கொண்டார்.

மலையக மக்கள் தமது பிரஜாஉரிமைக்காக தொடர்ந்து போராட வேண்டுமென்று கோப்பாய் கோமான் கு.வன்னியசிங்கம் அறைகூவல் விடுத்தார். அத்துடன் பல மலையகமாணவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள பெரிய கல்லூரிகளில் படிப்பதற்கு வசதியினை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களை ஊக்கப்படுத்தினார். தனது வீட்டிலேயே தங்கவைத்தார். 1948ல் பிரதமர் டீ.எஸ் சேனநாயக்காவும் அமைச்சர் ஜீ.ஜீ பொன்னம்பலமும் இரண்டு குதிரைகள் பூட்டிய வண்டியில் நீர்வேலிக்கு வருகை தந்தனர். இதனை அறிந்து கு.வ அவர்கள் இருவரின் வருகைக்கு எதிராகத் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு தமது எதிர்ப்பினைத் தெரிவித்தார்.

1949ல் தமிழரசுக்கட்சி என்ற பெயரில் ஒரு கட்சியை தமிழ் மக்களுக்கு உருவாக்க வேண்டும் என்ற உறுதியுடன் வன்னியசிங்கம் செயற் பட்டார். இதற்கான ஆரம்பக் கூட்டங்களை நல்லூர் கையிலாயபிள்ளையார் கோவிலடி, நவாலி, மாவிட்டபுரம் ஆகிய இடங்களில் நடாத்த ஏற்பாடுகளைச் செய்தார். ஆவரங்கால் சிவன் கோயில் வீதியிலும் ஒரு கூட்டம்ஆசிரியர் பொ.சிவகுரு தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது ஜீ.ஜீயின் தூண்டுதல் பிண்ணனியோடு குண்டர் படையொன்று கோப்பாய் D.R.O முருகேசம பிள்ளை தலைமையில் வந்திறங்கி கூட்டத்தைக் குழப்ப முயற்சித்தது. உடனே கோப்பாய்க கோமானின் தொண்டர்கள் குழப்பவாதிகளைத் துரத்திக் கலைத்தனர். இவ்வாறாக பல சிராமங்கள் மத்தியில் தமிழரசுக் கட்சியின் உருவாக்கத்திற்கு வன்னியனார் அரும்பாடு பட்டார். இறுதியில் மருதானையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழரசுக்கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. இதன்போது டாக்டர் நாகநாதனும் சாணக்கியர் கு.வன்னியசிங்கம் தந்தை செல்வாவுக்கு துணையாக நின்று செயற்பட்டார்.

தமிழரசுக்கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை வகுப்பதில் தந்தை செல்வாக்கு வலது கரமாகத் திகழ்ந்த பெருமை திரு.கு.வன்னிய சிங்கத்திற்கு உரியது. 1951ல் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையில் நடைபெற்றது. இம்மாநாட்டிற்கு தலைவராக கு.வன்னியசிங்கம் அவர்களை தந்தை செல்வா நியமித்து அவருக்கான தலைமைத்துவச் சிறப்பினை வெளிப்படுத்தினார். இந்த மாநாட்டின் மூலம் வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களை பேரணியில் திரட்டிய பெருமை வன்னிய சிங்கத்திற்கும் தமிழரசுக்கட்சிக்கும் ஏற்பட்டது. இந்த மாநாட்டில் தலைவர் நீண்டதொரு கனமான தீர்க்கதர்சனம் மிக்க உரையை நிகழ்த்தினார்.

"இந்த நாட்டின் பூர்வீக குடிகளான தமிழர் இங்கு சுதந்திரமான தேசிய இனமாக வாழவேண்டுமாயின் தாயகம், தேசியம் சுய நிர்ணயம் என்ற கோட்பாடுகளையும் பற்றுறுதியுடன் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கான ஒரே வழி "சமஷ்டி" ஆட்சிமுறையே! இதுவே எமது கட்சியின் பிரதான கொள்கை! என்று தலைவர் வன்னியசிங்கம் அறைகூவல் விடுத்தார். பல்லினம் மக்கள் வாழும் எமது இலங்கைத் திருநாட்டில் வடக்கு சமஷ்டியே கிழக்கும் இணைந்த சமஷ்டி தமிழரசுக்கட்சியின் பிரதான கொள்கை என்று கு.வ.வலியுறுத்தினார்.

சோல்பரியின் ஒற்றை ஆட்சி அரசியல் திட்டத்தின் மூலம் சிங்கள வர்களே நன்மை அடைகின்றனர். பாராளுமன்றத் தேர்தல் மூலம் சிங்களப் பிரதிநிதிகளே பெரும் எண்ணிக்கையிலான பாராளுமன்ற உறுப்பினராக சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் பேரின பௌத்த சிங்கள பேரின வாதத்தை வலியுறுத்தினர். தமிழரை இரண்டாந்தர பிரஜை களாகவே கணித்து பல வழிகளிலும் ஒடுக்கினார். கல்லோயா குடியேற்றுத் திட்டத்தின் மூலம் தமிழரின் பூர்வீக நிலங்கள் பறிக்கப்பட்டு சிங்களவர்களைக் குடியேற்றினர். இதன் மூலம் தமிழரின் நிலம் "கபளீகரம்" செய்யப்பட்டதுடன் கிழக்கு மாகாணத்தில் தமிழரின் இனப்பரம்பலில் விகிதாசாரம் குறைக்கப்பட்டது. அரசியல் பிரதி நிதித்துவம் குறைக்கப்பட்டு தமிழரின் சனநாயக உரிமையும் குரலும் சிங்களத் தலைவர்களினால் ஒடுக்கப்பட்டது. இதற்கு எதிராக வன்னியசிங்கம் பல வழிகளிலும் போராடினார். பாராளுமன்றில் சிங்கள அரசைக் கண்டித்து நீ, வாழு, எம்மையும் வாழவிடு என்று சிங்கம் போல் நின்று கர்ச்சித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1953ல் தமிழரசுக்கட்சியின் வாலிப முண்ணனியை அமைத்தார். இதன் தலைவராக தளபதி அமிர்தலிங்கத்தைத் தெரிவு செய்தார். தளபதி அமிர்தலிங்கம் தமிழ்மண் மீதும் தமிழ் மக்கள் மீதும் கொண்ட அடங்காப் பற்றினால் கணல் தெறிக்கும் உணர்ச்சிபூர்வமான பேச்சினால் தமிழ் மக்களை ஒன்று திரட்டினார்.

இயற்கை தமிழரசுக்கட்சியை நிறுவியவர்கள் மும்மூர்த்திகளான S.J.V செல்வநாயகம், பரிஸ்டர் கு.வன்னியசிங்கம், டாக்டர் E.M.V நாகநாதன் ஆகிய மூவருமே. இவர்கள் சிங்கள அரசிடம் அமைச்சுப் பதவிகளையோ அல்லது கோடிக்கணக்கான பணங்களையோ மற்றும் சுகபோக வாழ்க்கையையும் அதிகார நாட்டாண்மைகளையும் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை.

எலும்புத்துண்டுகளாக வீசப்படும் "சலுகை அரசியலை" வெறும் தமிழரின் உரிமை அரசியலுக்காகவே" தமது வாழ்வை அர்ப்பணித்தனர். இதில் முக்கியமான ஒருவர் கோப்பாய்க் கோமான் கு.வன்னியசிங்கமாவார்.

1956ம் ஆண்டு இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியமான கால கட்டமாகும். பிரதமர் S.W.R.D பண்டாரநாயக்கா "சிங்களம் மட்டும் அரசமொழி" என்ற சட்டத்தை பாராளுமன்றத்திலே கொண்டு வந்து நிறைவேற்றினார். இது தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார சமூக வாழ்வின் மீது ஏற்பட்ட பலத்த அடியாகும். அத்துடன் சிங்கள பேரின வாத சிந்தனையின் வெளிப்பாடாகவும் அமைந்தது. தமிழ் மொழியையும் தமிழ் இனத்தையும் இந்த இலங்கைத் திருநாட்டில் அடக்கி ஒடுக்கி அடிமைகள் ஆக்க வேண்டும் என்று சிங்கள பௌத்த பேரினவாதம் நீண்ட காலமாகக் கண்டு வந்த கனவின் வெளிப்பாடே "சிங்களம் மட்டும் சட்டமாகும்" இதைக் கண்டு தலைவர் கு.வன்னியசிங்கமும் அவரது கட்சியினரும் வீறுகொண்டெழுந்தனர்.

1956ம் ஆண்டு யுன் மாதம் 5ம் திகதி இச்சட்டத்திற்கு எதிராக காலிமுகத்திடலிலே தந்தை செல்வா தலைமையில் ஒன்று கூடி பெரும் சத்தியாக்கிரக போராட்டத்தினை நடாத்தினர். பிரதமர் பண்டாரநாயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவுக்கும் அவரது அரசுக்கும் எதிராக ஆக்ரோசமாக குரல் எழுப்பினார். சட்ட மசோதவைத் தீயிட்டுக் கொழுத்தினர். அப்பொழுது அந்த கூடத்திற்குக் கொண்டுவரப்பட்ட சிங்களக் காடையர்களும் குண்டர்களும் தமிழரசுக் கட்சித் தலைவர்களையும் தொண்டர்களையும் அடித்து நொறுக்கினர். அகிம்சை அடிப்படையில் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சத்தியாக்கிரகிகள் ஓடவில்லை. எதிர்க்கவில்லை. அடி உதைகளை வழங்கிக் கொண்டனர். இனவெளி, மதவெறி பிடித்த சிங்களக் காடையர்கள் அகிம்சாவாதிகளை அடித்து உதைத்தனர்.

எங்கள் கோப்பாய் கோமான் வன்னியசிங்கம் கட்டுண்ட சிங்கம் போல் கொடுமைகளைத்தாங்கிக் கொண்டிருந்தார். அவரது மேலாங்கி கிழிக்கப்பட்டது. தளபதி அமிர்தலிங்கத்தின் மண்டை உடைக்கப்பட்டு இரத்த ஆறு ஓடியது. இந்தப் பயங்கரவாத செயல்களைச் செய்தவர்களை அகிம்சாமூர்த்தி கௌதமபுத்தர் கூட மன்னிக்க மாட்டார்.

சிங்களம் மட்டும் அரசகரும மொழி என்ற சட்டம் 1956.06.15ம் திகதி நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து நாடு முழுவதும் கலவரங்கள் ஏற்பட்டன.

தொடர்ந்து 1957ல் திருமலையாத்திரை பருத்தித்துறையில் இருந்தும் நடைபெற்றது. திருக்கோயிலில் இருந்து திருமலை நோக்கிய யாத்திரைக்கு கு.வன்னியசிங்கம் தலைமை தாங்கி சென்றார் என்பது வரலாறு. 1958ல் சிங்கள அரசு சிங்களச் சிறிபொறித்த C.T.B.பஸ்களையும் வேறு அரச வாகனங்களையும் தமிழர் பிரதேசங்களுக்கு அனுப்பியது. இதனால் ஆத்திரம் அடைந்த தமிழ் மக்கள் தங்கள் எதிர்ப்பினை பல வடிவங்களில் வெளிப்படுத்தினார். சிங்களச்சிறி எழுத்து தார் பூசி அழிக்கப்பட்டது. அடித்து நொறுக்கப்பட்டது. வாகனங்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டது. இதன் எதிரொலியாக தமிழரசுக்கட்சியின் தலைவர்களும் பல தொண்டர்களும் கைது செய்யப்பட்டு இரு வாரம் சிறை வைக்கப்பட்டனர். மிகத் தீவிரமாக இயங்கிய தலைவர் கு.வன்னியசிங்கம் இருவாரம் சிறையிலிருந்து மீண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக தமிழினத்தின் விடுதலைக்காக பலபோராட்டங்களையும் தமிழரசுக்கட்சி மேற்கொண்டது. அவற்றுள் கறுப்புக் கொடி காட்டல், துண்டுப்பிரசுரங்கள் வெளியிடல், சத்தியாக்கிரம், சட்டமறுப்பு, சிறி எதிர்ப்பு, சாதி எதிர்ப்ப, சமபந்தி போசனம், பாதயாத்திரை, அரச எதிர்ப்புப் பாத யாத்திரை, அரச எதிர்ப்புப் பிரச்சாரங்கள், பேச்சு வார்த்தைகள், ஒப்பந் தங்கள் என்பன குறிப்பிடத்தக்கவை. இவை அனைத்திலும் மன உறுதி யோடும் விசுவாசத்தோடும் தமிழ் மண்ணைக் காக்கவும் தமிழ் மக்களுக் காகவும் போராடிய ஓர் ஒப்பற்ற தலைவன் கோப்பாய்க் கோமான் கு.வன்னிய சிங்கமாவார். அன்னார் 1959ம் ஆண்டு தனது 48 வத வயதிலே காலமானார்.

பாசமுள்ள அன்பு மனைவி பாசமுள்ள ஐந்து பெண்பிள்ளைகள் வடக்கிலும், கிழக்கிலும் பரந்து வாழும் விசுவாசமுள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரும் கண்ணீரில் மூழ்க அவர் இவ்வுலகை விட்டு விடைபெற்றுச் சென்றார்.

*"என்று தணியும் எங்கள் சுதந்திரதாகம்*
*என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்"*

**கவிஞர்.க.சின்னராஜா**
BA.JP



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் வன்னிய சிங்கத்தைப் போற்றுவோம்

கோப்பாய்க் கோட்டையின் சிங்கமவர்.
தமிழர் மனங்களினில் தங்கமவர்.
வடக்கையும் கிழக்கையும் இணைத்தவர்.
வலிமையை எமக்குத் தந்தவர்.
அரசியல் நெறிகள் சொன்வர்.
தமிழ் இனத்தை விற்றுப்பிழைத்தரை விரட்டி அடித்த மாவீரன்.
அரசியல் அறிவில் உயர்ந்தவர்.
அர்த்த சாஸ்த்திரம் கற்றவர். சரித்திரம் பலவும் படைத்தவர்.
"சானக்கியன்" நாமம் பெற்றவர்.
சட்டத்துறையில் நிபுணர் அவர் "பரிஸ்டர் பட்டமும் பெற்றவர்.
மலையக மக்களின் வாழ்விற்காய் பிரஜா உரிமைச்சட்டத்தை எதிர்த்தவர்.
சமஷ்டி" ஒன்றே தமிழர்க்கு "சுய ஆட்சியை" வழங்கும் என்றவர்.
உயர்ந்த எண்ணம் கொண்டவர் உரிமைக் குரலாய் ஒலித்தவர்.
சிங்கம் போன்ற வலிடையுடன் செந்தமிழ் காக்கப் புறப்பட்டவர்.
தமிழ் ஈழம் எங்கும் நடந்தவர்.
"தமிழரசு" தோன்ற உழைத்தவர்.
அறுபத ஆண்டுகள் கடந்தன.
அவர் விதைத்த விதைகள் வளர்ந்தன.
தமிழ்த் தேசியக் கொடியினை ஏற்றுவோம்.
தலைவர் வன்னிய சிங்கத்தைப் போற்றுவோம்.

***சித்திரா சின்னராஜன்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது தந்தை தமிழரசு க.சின்னத்துரை அவர்களின் அசையாத விருஷ்சமாக விளங்கியவர் கோப்பாய்க்கோமான் வன்னியசிங்கம் அவர்கள். கோப்பாய்த் தொகுதியில் தேர்தலில் வன்னியசிங்கம் ஐயா நியமிக்கப்படுகிறார் என்று அறிந்ததும் எனது தந்தையார் வாலிபத்தின் மிடுக்கும் துணிவுடனும் தந்தை S.J.V இடம் ஓடோடிச் சென்று கோப்பா யில் வெற்றிக்கு மக்கள் நாங்கள் நல்மனத்துடன் வரவேற்றவர். கோப்பாய்த் தொகுதியைத் தமிழரசுக் கோட்டையின் குடிமகனாக்கினார்.

1709.2019 அன்று கு.வன்னியசிங்கம் ஐயாவின் 60வது நினைவு நாள் அன்று அவரது விழாவுக்கு அன்னாரின் சிலைக்கு மாலையணித்து கோப்பாய்த்தொகுதி மக்களோடு மக்களாய் தூர நாடுகளில்இருந்தும் உள்ளூரில் இருந்தும் உறவோடு வந்து பிள்ளைகள் பேரப்பிள்ளைகள், உறவினர் எல்லோருமாக வருகிறார் என்பது அறிந்து எமது குடும்பத்திற்கு மகிழ்ச்சியே.

அத்தோடு கோமான் அவர்களுக்கென ஓர் சிறு நூலினை 60ம் ஆண்டு மலராக எமது கிராமத்து க.திரவியம் அவர்கள் வன்னியரின் குடும்பத்தாரின் ஒத்துழைப்புடன் வெளியிடுவது மிகவும் பாராட்டுக்குரியது. எமது தந்தை அவர்கள் இப்போது இருந்தால் வன்னியசிங்கம் ஐயாவின் குடும்பத்தினரை தனது "தமிழரசு வாசகத்திற்கு" அழைத்து வரவேற்று சந்தோஷப்படுத்தி இருப்பார்.

சகல வழிகளிலும் 60வது நினைவு நாளினை நடாத்துவதற்கு ஒத்துழைப்புச் செய்கின்ற கோப்பாய்த் தொகுதி மக்களுக்கு எமது தந்தை தமிழரசு சின்னத்துக்கு அவர்களின் சார்பிலும் எமது குடும்பத்தவர் சார்பி லும் நன்றி நவில்தலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக கோப்பாய் கோமான் வன்னிய சிங்கம் அவர்களின் புகழ் என்றும் அன்னாரின் சார்பில் பெருவிழா ஒன்றினை ஏற்பாடு செய்ய இருப்பதாகவும் வன்னியர் மகள் அவரது வீதிப் பெயரினை திரைநீக்கம் "வன்னியசிங்கம் வீதி" செய்யவிருப்பதாக அறிந்து சந்தோஷப் படுகின்றோம்.

கோமான் புகழ் என்று வாழ்க!

நன்றி

**நன்றியுடன்**

**க.சின்னத்துரை தமிழரசு**

**மகன் ஸ்ரீவசந்தேஸ்வரன்** – UK

**மகள் ஸ்ரீவசந்தமாலா** – UK



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வு தாழ்வு அற்ற ஒன்னுபட்ட தமிழர் சமூகத்தையே நான் விரும்புகின்றேன் வேற்றுமைகள் நீங்கி அனைத்து தமிழர்களும் ஒற்றுமையாக தமிழர் முஸ்லீங்கள் என்ற ஓர் சமதர்ம சோஷலிச சுயநிர்ய உரிமை கொண்ட பூரண சுயாட்சி பெற்றதுமான தமிழர் அரசை ஐக்கிய இலங்கையில் சமஷ்டியின் அங்கமான பூரண சுயாட்சி பெற்ற தமிழர் நாட்டினை அமைப்போம் என்று அழைப்பு விடுகின்றேன்.

**கோப்பாய் கோமான் கு. வன்னியசிங்கம்.பா.உ**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org